## என் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு என்ன நிகழும்?

CLAS வழங்கும் ஒரு தொண்டூழிய வழக்குரைஞர் உங்கள் வழக்கை நடத்துவார். வழக்குரைஞரைப் பற்றிய தகவல்கள் உங்களுக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்படும். அதன் பிறகு நீங்கள் அவரின் கட்சிக்காரர் ஆவீர்கள்.

ஒரு தொண்டூழிய வழக்குரைஞர் என்பவர் தனியார் துறையில் தொழில் நடத்திக்கொண்டு தானே முன்வந்து தன் சேவைகளை வழங்கி CLAS க்கு தொண்டு செய்பவர்.

உங்கள் தொண்டூழிய வழக்குரைஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவருடைய கடிதங்களுக்கு நீங்கள் மறுமொழி அளிப்பதோடு அலுவலக சந்திப்புகளுக்கு செல்லவும் வேண்டும். உங்கள் தொண்டூழிய வழக்குரைஞரோடு நீங்கள் ஒத்துழைக்கத் தவறினால் அவர் தன் சேவைகளை நிறுத்திக்கொள்ள நீதிமன்றத்திடம் விண்ணப்பிக்கலாம்.

## நான் என் தொண்டூழிய வழக்குரைஞருக்கு கட்டணம் செலுத்த வேண்டுமா ?

உங்களின் தொண்டூழிய வழக்குரைஞர் அவரின் ஆலோசனைக்காகவோ அல்லது நீதிமன்ற வருகைக்காகவோ எவ்வித கட்டணமும் விதிக்க மாட்டார். போலீஸ் வாக்குமூலங்கள், அறிக்கைகள் பெற ஏற்படும் செலவுகள், போக்குவரத்து செலவுகள் ஆகிய சில்லறை செலவுகளுக்கு பணம் செலுத்துமாறு அவர் உங்களை கேட்டுக்கொள்ளலாம்.

## CLAS சின் உதவி எப்போது நிறைவுபெறும்?

உங்கள் வழக்கு நிறைவு பெறும்போது அல்லது CLAS அதன் உதவியை மீட்டுக்கொள்ளும் போது அல்லது CLAS சின் உதவியின்றி நீங்களாகவே வழக்கை தொடர முடிவு செய்யும் போது CLAS சின் உதவி நிறைவு பெறும்.

## மேல் விவரங்கள்

மேல் விவரங்களுக்கு தயவு செய்து அலுவலக நேரத்தில் 6534 1564 என்ற தொலைபேசி எண் வழி எங்களை அழையுங்கள். அல்லது 6534 5237 என்ற எண் மூலம் எங்களுக்கு தொலைபிரதி அனுப்புங்கள்.

CLAS@lawsoc.org.sg என்ற முகவரிக்கு நீங்கள் எங்களுக்கு மின் அஞ்சலும் அனுப்பலாம்.

http://www.lawsociety.org.sg என்ற எங்கள் இணையப் பக்கத்திற்கும் நீங்கள் செல்லலாம்.

உரிமை கைவிடல்

இதில் அடங்கியுள்ள தகவல்கள் ஆகஸ்ட் 2005 நடப்பில் இருக்கும் சட்டத்தைக் குறித்த பொதுவான மற்றும் அடிப்படையான தகவல்களை மட்டுமே பிரதிநிதிக்கின்றன. இதில் அடங்கியுள்ள தகவல்கள் சிங்கப்பூர் சட்டக் கழகத்தின் குற்றவியல் சட்ட உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன. நம்பத்தகுந்தவை மற்றும் மிகச் சரியானவை என்று கருதப்படும் வட்டாரங்களிலிருந்து பெறப்பட்டவை. ஆயினும், அவற்றில் உள்ள பிழைகளுக்கும் விடுபாடுகளுக்கும் கழகமோ அதன் பிரதிநிதிகளோ எவ்வித பொறுப்பும் ஏற்க மாட்டா. வாசகர்கள் தனிப்பட்ட சட்ட ஆலோசனையை நாட வேண்டும்.

அதன் விருப்புரிமைப்படி ஒரு விண்ணப்பத்தை ஏற்கவோ, நிராகரிக்கவோ குற்றவியல் சட்ட உதவி திட்டக் குழு தனது உரிமையைத் தக்கவைத்துக்கொள்ளும். இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் எந்த தகவல் அல்லது அறிக்கையிலிருந்தும் உறுதிமொழி வழங்குவதாகவோ, ஊகிக்கவோ அல்லது மற்ற வகையில் பொருள்கொள்ளவோ அல்லது சுட்டிக்காட்டவோ இயலாது.

தன் விருப்புரிமைப்படி எந்நேரமும் குற்றவியல் சட்ட உதவி திட்டக் குழு தன் உதவியை மீட்டுக்கொள்ளும் உரிமையைத் தக்கவைத்துக்கொள்ளும்.

தன் விருப்புரிமைப்படி, சட்ட உதவிக்கான ஒரு விண்ணப்பத்தை நிர்ணயிப்பதில் எந்த ஒரு நிபந்தனையிலோ அல்லது தகுதியிலோ முன் அறிவிப்பின்றி திருத்தம் அல்லது மாற்றம் செய்யும் உரிமையை குற்றவியல் சட்ட உதவி திட்டக்குழு மேலும் தக்கவைத்துக்கொள்ளும்.

இத் துண்டு அறிக்கை சிங்கப்பூர் சட்டக் கழகம், குற்றவியல் சட்ட உதவித் திட்டத்தால் வெளியிடப்பட்டிருக்கிறது.

சிங்கப்பூர் சட்டக் கழகம்
39 சௌத் பிரிட்ஜ் சாலை
சிங்கப்பூர் 058673
தொலைபேசி எண் - 65382500
தொலைபிரதி எண் - 65335700
இணையப் பக்கம்: http://www.lawsociety.org.sg

பதிப்புரிமை 2005

மறுபதிப்பு ஆகஸ்ட் 2005

# குற்றவியல் சட்ட உதவித் திட்டம்




சிங்கப்பூர் சட்டக் கழகம்

## சி.எல்.ஏ.எஸ் (CLAS) என்றால் என்ன?

இந்த 'குற்றவியல் சட்ட உதவித் திட்டம்' (CLAS) செப்டம்பர் மாதம் 1985 ஆம் ஆண்டு சிங்கப்பூர் சட்டக் கழகத்தின் ஒரு திட்டமாக அமைக்கப்பட்டது. செவ்வனே தங்களின் சேவையை அர்ப்பணிக்கும் நான்கு முழுநேர ஊழியர் குழுவுடன் அது சட்ட கழகத்தால் தொடர்ந்து நிர்வகிக்கப்படுகிறது.

மரண தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றச்சாட்டுகள் அல்லாத குற்றச்சாட்டுகளை எதிர்நோக்கும் வசதியற்றவர்களுக்குச் சட்ட உதவி வழங்க வேண்டுமென்ற சட்டக் கழகத்தின் குறிக்கோள்களில் ஒன்றினை CLAS பூர்த்தி செய்கிறது.

அரசாங்கத்தால் நடத்தப்படும் சட்ட உதவி இலாக்காவிலிருந்து (Legal Aid Bureau) CLAS வேறுபட்டது. அவ்விலாக்கா சட்ட உதவியையும் மற்றும் ஆலோசனையையும் உரிமையியல் (சிவில்) வழக்குகளுக்கு மட்டுமே வழங்குகிறது. அதோடு விண்ணப்பதாரர்கள் பொருளாதார வசதி மற்றும் தகுதி தேர்வுகளுக்கும் உட்படுத்தப்படுவர்.

## எவ்வகையான குற்றங்களுக்கு CLAS உதவி அளிக்கும்?

பின்வரும் நிறைவேற்றுச் சட்டங்களின் கீழ் வரும் குற்றங்களை மட்டுமே CLAS உள்ளடக்கும்.

1. ஆயுத மற்றும் வெடிமருந்து சட்டம்
2. ஆயுத குற்றச்செயல் சட்டம்
3. அரித்து சிதைக்கவல்ல மற்றும் வெடிபொருள் மற்றும் சட்டப்புறம்பான ஆயுதங்கள் சட்டம்
4. அபாயகரமான வாணவெடி சட்டம்
5. படைத்திரட்டுச் சட்டம்
6. வெடிபொருள் சட்டம்
7. திரைப்படச் சட்டம்
8. பல்வகை குற்றச்செயல் சட்டம் (பொது ஒழுங்கு மற்றும் தொல்லை)
9. தவறான போதைப்பொருள் புழக்கச் சட்டம்
10. தண்டனை சட்ட விதித்தொகுப்பு
11. ஊழல் தடுப்புச் சட்டம்
12. விரும்பத்தகாத பிரசுரங்கள் சட்டம்
13. நாசவேலைச் சட்டம்

மரண தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றச்செயலுக்காக நீங்கள் குற்றஞ்சாட்டப்படும்போது உங்களுக்கு ஒரு வழக்குரைஞரை நியமிக்க வசதியில்லை என்றால், அரசாங்கம் உங்களுக்கு ஒரு வழக்குரைஞரை நியமிக்கும்.

## குற்றவியல் சட்ட உதவிக்கு யார் விண்ணப்பிக்கலாம்?

சிங்கப்பூரில் இருக்கும் எவராயினும் ஒருவர், ஒரு குற்றச்செயலுக்காக நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டு குற்றச்சாட்டை ஒத்துக்கொள்ளாமலும் ஒரு வழக்குரைஞரை நியமிக்க வசதியில்லாமலும் இருந்தால் மட்டுமே குற்றவியல் சட்ட உதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

## நான் எவ்வாறு குற்றவியல் சட்ட உதவிக்கு விண்ணப்பிப்பது?

நீங்கள் நேரடியாக, கீழ்க்கண்ட முகவரியில் இருக்கும் CLAS அலுவலகத்திற்கு சென்று குற்றவியல் சட்ட உதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

கீழ் நீதிமன்றங்கள்
5 ஆம் தளம் (கீழ் நீதிமன்றம் எண் 6க்குப் பக்கத்தில் உள்ள அறை)
எண் 1, ஹாவ்லாக் சதுக்கம்
சிங்கப்பூர் 059724

உங்கள் விண்ணப்பத்தை அஞ்சல் வழி கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பலாம்:

சிங்கப்பூர் சட்டக் கழகம்
குற்றவியல் சட்ட உதவித் திட்டம்
39 சௌத் பிரிட்ஜ் சாலை
சிங்கப்பூர் 058673

மின்னியல் வழி http://www.lawsociety.org.sg என்ற எங்கள் இணையப் பக்கத்திலிருந்தும் நீங்கள் ஒரு பாரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் விண்ணப்பத்தைப் பெற்றப் பின், தேவை இருப்பின் CLAS சின் ஊழியர் ஒருவர் தடுப்பு நிலையத்திலோ அல்லது CLAS அலுவலகத்திலோ ஒரு நேர்முகச் சந்திப்பிற்கு ஏற்பாடு செய்வார்.

## CLAS செயல்படும் நேரங்கள் என்ன ?

திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரையிலும் CLAS திறந்திருக்கும்.

சனிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும், பொது விடுமுறை நாட்களிலும் எங்கள் அலுவலகம் மூடியிருக்கும்.

## ஒரு நேரடி விண்ணப்பம் அல்லது சந்திப்புக்கு வர நான் என்னென்ன ஆவணங்களைக் கொண்டு வர வேண்டும்?

உங்கள் பொருளாதார வசதியை நாங்கள் நிர்ணயிக்க உதவும் ஆவணங்களை நீங்கள் கொண்டு வர வேண்டும். கீழ்க்கண்டவை உள்பட:

(a) வழக்குடன் தொடர்புள்ள அனைத்து ஆவணங்களும். உதாரணத்திற்கு, குற்றப் பத்திரிக்கை (கள்), ஜாமீன் உத்தரவாத பத்திரம் (கள்), ஆக அண்மைய நீதிமன்ற அறிவிப்பு / விசாரணை சீட்டு(கள்).

(b) பெற்றோர்கள், உடன் பிறப்புகள், பிள்ளைகள், விண்ணப்பதாரர், விண்ணப்பதாரரின் வாழ்க்கைத் துணை ஆகியோரின் எல்லா வங்கி புத்தகங்கள், நடப்புக் கணக்கு வாக்குமூலங்கள் மற்றும் நிலை வைப்பு சீட்டுகள் ( தயவுசெய்து எல்லா வங்கி புத்தகங்களையும் வாக்குமூலங்களையும் ஆக அண்மைய தேதியிட்டு புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

(c) பெற்றோர், திருமணம் ஆகாத உடன் பிறப்புகள், விண்ணப்பதாரர், விண்ணப்பதாரரின் வாழ்க்கைத் துணை ஆகியோரின் மாத அல்லது வருடாந்திர நிகர வருமானத்தைக் குறிக்கும் வருமான சீட்டு(கள்) அல்லது முதலாளிகளிடமிருந்து கடிதங்கள். அவை இல்லையெனில், கடந்த 12 மாதங்களுக்கான மத்திய சேம நிதி கழக வாக்குமூலங்கள்.

(d) வழக்குடன் தொடர்பான சில உண்மைகளின் ஆங்கில சுருக்க விளக்கம்.

(e) தீர்க்கப்படாத கட்டண பட்டியல், ஏதேனும் இருப்பின்.

(f) விண்ணப்பதாரரின் திருமணம் ஆகாத உடன் பிறப்புகள் மற்றும் பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்கள்.

(g) விண்ணப்பதாரரின் திருமண சான்றிதழ் அல்லது பெற்றோர்களின் திருமண சான்றிதழ்
(குற்றஞ்சாட்டப்பட்டவர் இளம் வயதினராக இருப்பின்)

## உதவி பெற நான் எவ்வாறு தகுதி பெறுகிறேன்?

வழக்குரைஞருக்கு பணம் செலுத்த வசதியற்றவர்களுக்கு CLAS குற்றவியல் சட்ட உதவி வழங்குகிறது.

CLAS ஊழியருடனான நேர்முக சந்திப்பின் போது உங்கள் வருமானம், சேமிப்புகள், சொத்து மற்றும் இதர உடைமைகள் குறித்து கேள்விகள் கேட்கப்படும். இது பொருளாதார வசதி நிர்ணய சோதனை என்று அழைக்கப்படும். உங்கள் பொருளாதார வசதியைக் குறித்த ஆதாரங்களை நீங்கள் வழங்க வேண்டும்.

வருமான தேர்வாய்வில் வெற்றி பெற, மணமாகாத விண்ணப்பதாரர்களுக்கு மாத நிகர வருமானம் $1000 க்கும் குறைவாக இருக்க வேண்டும், மற்றும் மணமான விண்ணப்பதாரர்களுக்கு, கணவன், மனைவி இருவரது சம்பளமும் சேர்த்து மாத நிகர வருமானம் $1300க்கும் குறைவாக இருத்தல் வேண்டும். மணமான விண்ணப்பதாரர்களுக்கு அவரை சார்ந்தவர்கள் இருந்தால் ( கணவன் / மனைவி தவிர்த்து ) அவர்களுடைய மாத நிகர வருமான உச்சவரம்பு தொகையான $1300 உடன் உதவித்தொகையான $160 சேர்த்துக் கொள்ளப்படும்.

நீங்கள் CLAS க்கு கொடுக்கும் தகவல்கள் அனைத்தும் உண்மையாக இருக்க வேண்டும். இல்லையெனில், நீங்கள் தகுதி பெற்றாலும் CLAS தன் உதவியை மீட்டுக்கொள்ளலாம். எதிர்காலத்தில் உதவி பெறுவதிலிருந்தும் நீங்கள் தடைச் செய்யப்படலாம்.

## என் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் நான் மேல் முறையீடு செய்யலாமா ?

உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருந்தால், முடிவை எதிர்த்து நீங்கள் எழுத்து மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு மேல்முறையீடு செய்யலாம்:

தலைவர்
குற்றவியல் சட்ட உதவி திட்டக்குழு
சிங்கப்பூர் சட்டக் கழகம்
39 சௌத் பிரிட்ஜ் ரோடு
சிங்கப்பூர் 058673